සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

தரம் 08 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | 22 T

சுட்டெண் .......................................

# தமிழ் மொழியும் இலக்கியமும்

நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகப் பொருத்தமான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

01. "ஒரே ஒரு பாடலைப் பெற்ற சத்துருக்கன் கம்பனுடைய முழுப் பரிவிற்கும் பாத்திரமாகி நிற்கின்றான். இங்கு "பரிவு" என்பதன் ஒத்தசொல்,
1. துன்பம் 2. கவலை 3. அன்பு 4. கோபம்

02. தோழிக்கிளிகள் சூழவந்து தோழி உன்னைப் போற்றுவேன். இங்கு "தோழி" என்பதன் ஒத்த சொல்,
1. நண்பன் 2. பாங்கி 3. தலைவி 4. ஆயம்

03. கையைக் கழுவிய தண்ணீரைக் கொண்டு ரசம் வைப்பதற்காக கொடுத்தேன். இங்கு தண்ணீர் என்பதன் எதிர்க்கருத்து,
1. வெந்நீர் 2. வெண்ணீர் 3. சுடுநீர் 4. வென்னீர்

04. தசரதன் பரதனின் நினைவு வந்தவுடன் தன்னையும் வருத்தி பிறரையும் வருத்துகின்றான். இங்கு "பிறர்" என்பதன் எதிர்க்கருத்து,
1. அயலவர் 2. உறவினர் 3. தமர் 4. சுற்றத்தார்

05. தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என அண்ணன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். இங்கு "பிரான்" என்பதன் எதிர்பாற் சொல்,
1. பிரானி 2. பிராட்டி 3. பிரார்த்தி 4. பிராமி

06. ஆந்தை அலறும் என்பது போல "குரங்கு",
1. அழும் 2. கத்தும் 3. உறுமும் 4. அலப்பும்

07. கடவுள் இருக்கின்றான் என நம்புபவன்,
1. ஆத்திகன் 2. பக்தன் 3. நாத்திகன் 4. முனிவன்

08. Super Market (சுப்பர் மார்க்கெட்) எனபதன் தமிழ் வடிவம்,
1. அங்காடி 2. அருங்காட்சியகம் 3. சிறப்பங்காடி 4. அமைவனங்கள்

09. மலைநாட்டின் புல்வெளிகள் பச்சைப் பசேல் எனக் காட்சியளித்தன. இங்கு "பச்சைப் பசேல்" என்பது,
1. இரட்டைக்கிளவி 2. அடுக்குத் தொடர் 3. அடுக்கிடுக்குத் தொடர் 4. இணைமொழி

10. வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும் என்ற கருத்தினை விளக்கும் பழமொழி,
1. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு 2. இரக்கப் போனாலும் சிறக்கப் போ
3. கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு 4. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்

11. ஒரு தொழிலை மனமின்றி கடமைக்காக செய்தல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்,
1. கடன் கழித்தல் 2. கள்ளேடு விடுதல் 3. ஆறப்போடுதல் 4. கைவிடுதல்.

12. பாம்பு புற்றிலிருந்து புறப்பட்டது. இங்கு "இருந்து" எனும் ஐந்தாம் வேற்றுமைக்குரிய சொல்லுருபு உணர்த்தும் பொருள்,
1. எல்லை 2. ஒப்பு 3. ஏது 4. நீங்கல்

13. பின்வருவனவற்றுள் தொழிற் பெயராக அமைந்த சொல்,
1. சென்றான் 2. பாடல் 3. உழவன் 4. வைத்தியர்

14. மரத்திலிருந்த பூக்கள் நிலத்தில் விழுந்தன. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள எழுவாய்,
1. மரம் 2. பூக்கள் 3. நிலம் 4. விழுந்தன.



kalvi.lk

15. பின்வருவனவற்றுள் காரணப் பெயராக அமைந்த சொல்,
1. நாற்காலி 2. தளபாடம் 3. எழுத்தாளன் 4. முள்ளி

16. தமிழில் காணப்படும் உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை,
1. 247 2. 216 3. 217 4. 246

17. நீ கவனமாக படித்திருந்தால் பரீட்சையில் .........................................
1. சித்தியடைந்திருப்பாய் 2. சித்தியடைவாய்
3. சித்தியடையலாம் 4. சித்தியடைகிறாய்

18. நேற்று நீயும் அவனும் கடைக்குச் .....................................
1. சென்றாய் 2. சென்றான் 3. சென்றோம் 4. சென்றீர்கள்

19. வானில் நட்சத்திரங்கள் அழகாக ..................................
1. தோன்றியது 2. தோன்றுகின்றன 3. தோன்றுகின்றது 4. தோன்றுகிறது

20. ஒழுங்கின்றிக் காணப்படும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான முறையைத் தெரிவு செய்க.
(அ) பெற்றோரும் இதனைச் சொல்லிக் கொடுப்பதில்லை.
(ஆ) இவ்வுணவகளின் கெடுதல்களை அவர்கள் அறிந்திருப்பதில்லை.
(இ) இவற்றால் பணவிரயமும் நோய்களுமே விளைகின்றன.
(ஈ) இன்று குழந்தைகள் கடைகளில் விற்கும் உணவுகளையே விரும்புகின்றனர்.
(உ) எனவே இவை தொடர்பிலான விழிப்புணர்வு பெற்றோருக்கு இருக்க வேண்டியது அவசியம்.

1. ஈ, ஆ, அ, இ, உ 2. ஈ, ஆ, அ, உ, இ 3. ஈ, உ, அ, ஆ, இ 4. ஆ, ஈ, அ, இ, உ

(2x20=40புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி II

- **முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை வரைக.

1. காடுகளைப் பாதுகாப்போம்.
2. வயலோரக் கிராமத்தின் எழில்
3. நான் கண்ட பயங்கரக் கனவு
4. கையடக்கத் தொலைபேசி பாவனையின் விளைவுகள்

(20 புள்ளிகள்)

(02) சுகவீனமுற்றிருக்கும் உமது நண்பர் ஒருவருக்கு ஆறுதல் கூறியும் அவர் நலமுற வேண்டி பிரார்த்தித்தும் 50 சொற்களில் அமையுமாறு கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள்)

(03) பாட நூலை அடிப்படையாக கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. "வியாபாரியின் கோபம்", "இரண்டு தம்பிகள்" எனும் நாட்டுப்புறக் கதைகளை எழுதியவர் யார்?
2. கூண்டிற் கிளி எனும் பாடப்பகுதியில் கிளியுடன் உரையாடிய பெண்ணின் பெயர் யாது?
3. ஒரு பாட்டுடையான எனும் பாடப்பகுதியில் "உலகம் ஏழினோடு ஏழையும் கலக்குவன்" என இராமரால் குறிப்பிடப்படுபவன் யார்?
4. "நாராய் நாராய்..." எனத் தொடங்கும் பாடலை இயற்றிய புலவர் யார்?
5. "போரும் அமைதியும்" எனும் நாவலின் ஆசிரியர் யார்?

(10 புள்ளிகள்)

(04) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்க.

1. ஒளி, ஒழி
2. பரவை, பறவை
3. பானம், பாணம்
4. உலவு, உளவு
5. பனி, பணி

(10 புள்ளிகள்)

Education கல்வி அத்யாபன

(05) பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் வேற்றுமை உருபு, வேற்றுமைப் பொருள் என்பவற்றை இனங்கண்டு அட்டவணைப்படுத்துக.

1. அப்பா மரத்தை வெட்டினார்
2. கீரிக்கு பகை பாம்பு.
3. குரங்கினது வால்
4. இராமனோடு இலக்குவணனும் காட்டுக்குச் சென்றான்.
5. கவியில் சிறந்தவன் கம்பன்

(10 புள்ளிகள்)

(06) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

1. தமிழ் எழுத்துக்களில் முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?
2. நான்காம் வேற்றுமையின் தகுதிப் பொருளுக்கு உதாரணம் ஒன்று தருக.
3. காரண இடுகுறிப் பெயருக்கு உதாரணம் இரண்டு தருக.
4. சினைப்பெயர், தொழிற்பெயர் என்பவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
5. ஆறாம் வேற்றுமையின் உடைமைப் பொருளின் இரண்டு வகைகளும் எவை?

(10 புள்ளிகள்)

(07) பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

ஆக்கம் வேண்டுமெனில் - நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா - ஓயாது
உழைக்க வேண்டுமப்பா



kalvi.lk

உண்ணும் உணவுக்கும் - இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை நம்பி
வாழ்தல் வாழ்வாமோ

உண்ணும் உணவுக் கேங்காமல்
உடுக்கும் ஆடைக் கலையாமல்
பண்ணும் பல தொழில்கள் காண்போம்
பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்.
அண்ணல் காந்தி வழி பற்றி
அகிலம் புகழ வாழ்ந்திடுவோம்.

1. நன்மை அடைவதற்கு நாம் செய்ய வேண்டியது எது?

2. எதற்காக அந்நியரை நம்பி வாழக்கூடாது என கவிஞர் கூறியுள்ளார்?

3. கவிஞர் பேய் என எதனைக் கூறியுள்ளார்?

4. யாருடைய வழியைப் பின்பற்ற வேண்டுமென இக்கவிதையில் கூறப்பட்டுள்ளது?

5. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.
   (அ) அகிலம்
   (ஆ) புகழ்

(10 புள்ளிகள்)



kalvi.lk

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 08 - தமிழ் மொழியும் இலக்கியமும்**
**விடைப்பத்திரம்**

## பகுதி I

| வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 06 | 4 | 11 | 1 | 16 | 2 |
| 02 | 2 | 07 | 1 | 12 | 4 | 17 | 1 |
| 03 | 1 | 08 | 3 | 13 | 2 | 18 | 4 |
| 04 | 3 | 09 | 3 | 14 | 2 | 19 | 2 |
| 05 | 2 | 10 | 2 | 15 | 3 | 20 | 1 |

## பகுதி II

| வினா இல. | | விடை | | புள்ளி |
|---|---|---|---|---|
| 01. | | கட்டுரை | | |
| | | பொருளளவு/ விடயப் பொருத்தம் | | 10 |
| | | கருத்து வெளிப்பாடும் மொழிச்செம்மையும் | | 06 |
| | | எழுத்து நுட்பங்கள் | | 04 |
| | | | | 20 |
| 02. | | கடிதம் | | |
| | | அமைப்பு | | 03 |
| | | விடயப் பொருத்தம் | | 05 |
| | | மொழிநடை | | 02 |
| | | | | 10 |
| 03. | 1. | கு. அழகிரிசாமி | | |
| | 2. | பவளம் | | |
| | 3. | இலக்குவணன் | | |
| | 4. | சக்திமுற்றப் புலவர் | | |
| | 5. | டால்ஸ்டாயின் | | 10 |
| 04. | 1. | ஒளி - வெளிச்சம், மறைதல் (ஒளிதல்)<br>ஒழி - ஒழித்தல் (அழித்தல், இல்லாமல் சேய்தல்) | | |
| | 2. | பரவை - கடல்<br>பறவை - பறக்கும் பறவை | | |
| | 3. | பானம் - குடிபானம்<br>பாணம் - அம்பு | | |
| | 4. | உலவு - உலாவுதல், பவனிவருதல்<br>உளவு - வேவு பார்த்தல் | | |
| | 5. | பனி - குளிர்பனி<br>பணி - தொண்டு, சேவை, வேலை | | 10 |
| 05. | | <u>வேற்றுமை உருபு</u> | <u>வே. பொருள்</u> | |
| | 1. | ஐ | செயற்படுபொருள் (அழித்தல்) | |
| | 2. | கு | பகை | |
| | 3. | அது | உடைமை/ தற்கிழமை | |
| | 4. | ஒடு | உடன் நிகழ்ச்சி | |
| | 5. | இல் | ஏது | 10 |

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

| | | | | |
|---|---|---|---|---|
| 06. | 1. | | 30 | |
| | 2. | | மாணவருக்கு உரியது அடக்கம் | |
| | 3. | | நாற்காலி, முள்ளி | |
| | 4. | | தலை, நடத்தல் | |
| | 5. | | நற்கிழமை, பிறிதின் கிழமை | 10 |
| 07. | 1. | | ஊக்கம் வேண்டும் | |
| | 2. | | உணவுக்கும், ஆடைக்கும் | |
| | 3. | | பஞ்சத்தை | |
| | 4. | | காந்தி | |
| | 5. | | அகிலம் - உலகம்<br>புகழ் - கீர்த்தி | 10 |



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**